முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1150

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.11.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த தேசிகா வாழ்க
ஓங்காரவடிவாக உலகை காக்க
ஓங்காரன் என் அவதாரமான குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 06 ம் நாள் 22.11.2022, செவ்வாய்கிழமை)
தாழ்விலா அரங்கன் சன்மார்க்க நெறி
தரணியை மாற்றுவது உறுதியப்பா
3. அப்பனே அரங்கனே ஆறுமுகா என
அகிலத்தார் வணங்கி குடில் நோக்கி
அறத்தோடு சுத்த சன்மார்க்கம் ஏற்று
ஐயமற தொடர்ந்து வருதல் காண
4. காணவே வையகத்தில் மாற்றம் உண்டு
கந்தவேலன் யான் அரங்கனுள் இருந்து
சிந்தை தெளிவித்து சிறப்பறிவு கூட்டி
சித்திமிகு மக்களாய் உலகோரை மாற்றி
5. மாற்றியே அற்புதத்தை உலகமெங்கும்
மகான் அரங்கன் அவதாரத்தின் பலனாக உருவாக்குவேன்
ஆக்குவேன் அற்புத மாற்றத்தை
ஆன்மீக ஞான அரசியல் களமாக்கி
6. ஆக்கியே உலகமெங்கும் ஞான ஆட்சி
அரங்கன் தொண்டர்களுக்கு வாய்ப்பாகத் தந்து
மாட்சிமைபட இந்த உலகமெங்கும்
மகத்துவமான ஞான ஆட்சி தந்தருள்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–